


எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையம்.

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு வசதி

# எழும்பூர் மெட்ரோ சுரங்க ரெயில் நிலையத்துக்கு விருது

சென்னை, நவ. 2–

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காகவும், விரைவு பயணத்துக்காகவும், மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது.

கோயம்பேடு – ஆலந்தூர், சின்னமலை – விமான நிலையம் வரை உயர்மட்ட பாதையிலும், திருமங்கலம் – சென்ட்ரல், சைதாப்பேட்டை – டி.எம்.எஸ். வரை சுரங்கப் பாதையிலும் மெட்ரோ ரெயில் சேவை நடந்து வருகிறது.

மெட்ரோ ரெயில் சேவைக்கு வரவேற்பு ஏற்பட்டதையொட்டி சென்னை மாநகரம் முழுவதும் மெட்ரோ ரெயில் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு வருகிறது.

எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையம்

இந்த நிலையில் எழும்பூர் மெட்ரோ சுரங்க ரெயில் நிலையத்துக்கு மத்திய அரசின் சிறந்த சுற்றுச்சூழல் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஐதராபாத்தில் நடந்த மத்திய வீட்டுவசதி கட்டிட மாநாட்டில் மத்திய மந்திரி ஹார்தீப் சிங்பூரி எழும்பூர் மெட்ரோ சுரங்க ரெயில் நிலையத்துக்கு இந்த விருதை வழங்கினார்.

சிறந்த கட்டிடம்

இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

எழும்பூரில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ சுரங்க ரெயில் நிலைய கட்டிடம் சிறந்த சுரங்க மெட்ரோ ரெயில் நிலையமாகவும், சிறந்த சுற்றுச்சூழலுக்கான விருதுக்காக மத்திய அரசின் சார்பில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஐதராபாத்தில் மத்திய வீட்டு வசதி துறை சார்பில் நடந்த கட்டிட மாநாட்டில் இந்த விருதை மத்திய மந்திரி ஹார்தீப் சிங்பூரி வழங்கினார்.

எழும்பூரில் ஒரே இடத்தில் தென் மாவட்ட ரெயில்களும், மெட்ரோ ரெயில்களும் புறப்பட்டு செல்லும் வகையில் நவீன முறையில் ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

எழும்பூர் சுரங்க மெட்ரோ ரெயில் நிலையம் நவீன முறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சார்பில் சிறந்த ரெயில் நிலையமாக தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு கிடைத்த சிறந்த பெருமை, கவுரவம் ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.